Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 49 of 2025

## Deposition of P.W.1 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. சங்கீதா | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of February 2026.

(Accused present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது ராசிபுரம் பழனிச்சந்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன சேட்டுடு என்கிற தங்கராஜ் எனது சின்ன மாமனார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் என் கணவரின் தம்பி. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு, நான் குடியிருக்கும் வீட்டின் அருகே சத்தம் வந்தது. நான் ஓடி போய் பார்த்தேன். என் சின்ன மாமனார் சேட்டுடு என்கிற தங்கராஜ் கீழே விழுந்து கிடந்தார். எப்படி கீழே விழுந்தார் என்று தெரியாது. அவருக்கு நெஞ்சு அருகே இரத்த காயம் இருந்தது. அந்த காயம் எப்படி ஆனது என்று எனக்கு தெரியாது. என் மாமனார் விழுந்து கிடந்த இடத்தில் வேறு யாரும் இல்லை. நான் கூப்பிட்ட பிறகு, தான் பக்கத்தில் இருந்த லட்சுமி, அழகு, ஜெயபால் ஆகியோர் வந்தார்கள். அதன்பிறகு, சின்னமாமனாரை என் அண்ணன் ஜெயபால் ராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு தூக்கி சென்றார். நானும் உடன் சென்றேன். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். கொஞ்ச நேரம் கழித்து அவர் இறந்து விட்டதாக சொன்னார்கள். சம்பவத்தன்று விஜயகுமார் என் சின்னமாமனார் வீட்டில் இல்லை. அவர் எங்கு போயிருந்தார் என்று எனக்கு தெரியாது. என் சின்னமாமனார் இறந்த பிறகு, அவரை அடக்கம் செய்தபோதும், இறுதி சடங்குகள் செய்தபோதும் எதிரி அங்கு வரவில்லை. என் சின்னமாமனார் இறந்தது சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்கவில்லை. ஆஸ்பத்திரியில் தான் நான் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆகும்.

வெள்ளை பேப்பரில் அந்த கையெழுத்தை ஆஸ்பத்திரியில் வைத்து வாங்கினார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக ராசிபுரம் நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுக்கவில்லை. போலீசார் என்னை ராசிபுரம் நடுவர் நீதிமன்றத்திற்கு கூட்டிபோனார்கள். அங்கு என்னிடம் பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(இந்நிலையில் இச்சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் போலீசார் விசாரணையில் இறந்துபோன எனது சின்னமாமனார் சேட்டு என்கிற தங்கராஜ் கூலிவேலை செய்து வந்தார் என்றும், அவர் எங்கள் வீட்டின் அருகே குடியிருந்து வந்தார் என்றும், எனது கொழுந்தனார் விஜயகுமார் தினமும் குடித்துவிட்டு வந்து அவரது மனைவியிடம் தகராறு செய்வார் என்றும், நாங்கள் சண்டையை விலக்கி சமாதானம் செய்து வைப்போம் என்றும், 12.05.2023ம் தேதி இரவு 10 மணிக்கு எதிரி விஜயகுமார் குடிபோதையில் அவரது மனைவி ரோஷினியிடம் தகராறு செய்து வந்தார் என்றும், அப்போது நானும் எனது சின்னமாமனார் சேட்டு என்கிற தங்கராஜ், அழகு மற்றும் லட்சுமி ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டோம் என்றும், அப்போது எதிரி என் சின்னமாமனாரிடம் நான் "என் பொண்டாட்டி கிட்ட தான் சண்டை போடுறேன் நீ எதுக்குடா எங்க குடும்ப பிரச்சனையில் குறுக்க வர" என்று சொல்லி அவரை கெட்ட வார்த்தைகளால் திட்டினார் என்றும், பின்பு வீட்டிற்குள் சென்று சிறிய காய் நறுக்கும் கத்தியை எடுத்து வந்து குத்த போனார் என்றும், என் சின்னமாமனார் தங்கராஜ் அருகில் கிடந்த கட்டையை எடுத்து எதிரியின் நடுமண்டையில் அடித்து ரத்த காயம் ஏற்பட்டது என்றும், உடனே எதிரி என்ன அடிச்சுட்டியா என்று திட்டி கொண்டே என் சின்ன மாமனாரை பார்த்து "நீ உயிரோடு இருந்தால் தானே என்னை அடிப்பாய் இத்தோடு சாவுடா" என்று கத்தியால் தங்கராஜீன் வலது பக்க நெஞ்சிற்கு மேல் ஒரு குத்தும் நடு நெஞ்சின் கீழ் பகுதியில் ஒரு குத்தும் குத்தியதில் தங்கராஜ் ரத்த காயத்துடன் சரிந்து கீழே விழுந்துவிட்டார் என்றும், இதை பார்த்து நான் சத்தம் போடவே விஜயகுமார் ஓடி விட்டார் என்றும், அதன்பிறகு, நாங்கள் குத்துப்பட்ட தங்கராஜை ஆஸ்பத்திரியில் சேர்த்தும் அவர் சிறிது நேரத்தில் இறந்துவிட்டதால் தங்கராஜை குத்தி கொலை செய்த விஜயகுமார் மீது நடவடிக்கை எடுக்குமாறு ராசிபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், மறுநாள் 13.05.2023ம் தேதி காலை 7 மணிக்கு ராசிபுரம் காவல் ஆய்வாளர் ராசிபுரம் அரசு மருத்துவமனை சவகிடங்கு முன்பு சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் கொலையுண்ட எனது சின்ன மாமனார் சேட்டு

என்கிற தங்கராஜ் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்த போது நானும் உடன் இருந்து சாட்சியாக கையெழுத்து போட்டேன் என்றும், சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என் கணவரின் சகோதரர் என்பதால் அவரை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**:** இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 49 of 2025**

**Deposition of P.W.2 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. லட்சுமி | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of February 2026.

(Accused present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது ராசிபுரம் ஆறுமுகம் சந்தில் குடியிருந்து வீட்டு வேலை செய்து வருகிறேன். இறந்து போன சேட்டு என்கிற தங்கராஜை தெரியும். அவர் எனக்கு மாமனார் உறவுமுறை. அவர் என் வீட்டிற்கு பக்கத்தில் 3வது வீட்டில் குடியிருந்து வந்தார். எதிரி விஜயகுமார் அவரது அண்ணன் மகன். எதிரி அவரது மனைவி ரோஷினியுடன் 2 வீடு தள்ளி குடியிருக்கிறார். சம்பவ சமயம் நான் வீட்டில் இருந்தேன். 2 வருடத்திற்கு முன்பு 12ம் தேதி இரவு 10 மணிக்கு சம்பவம் நடந்தது. எதிரி விஜயகுமார் வீட்டிலிருந்து சத்தம் வந்தது. நானும், என் மகன்களும் போய் பார்த்தபோது, விஜயகுமார் வீட்டில் வாசற்படி அருகே சேட்டு என்கிற தங்கராஜ் கீழே கிடந்தார். அவருக்கு நெஞ்சில் அடிப்பட்டு இருந்தது. நான் போய் பார்க்கும் போது சங்கீதா, அழகு, முனியப்பன் ஆகியோர் இருந்தார்கள். அடிப்பட்டவரை நாங்களும் அங்கிருந்த பசங்களும் ராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சிகிச்சையில் சேர்த்தோம். கொஞ்ச நேரத்தில் அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அதன்பிறகு, போலீசார் என்னை அரசு மருத்துவமனையிலும் என் வீட்டிற்கு வந்தும் விசாரித்தார்கள். இவ்வழக்கு சம்பந்தமாக, ராசிபுரம் நடுவர் நீதிமன்றத்தில் போலீசார் கூட்டி போனார்கள். அங்கு என்னை விசாரித்தார்கள். போலீசார் சொல்லி கொடுத்ததை நான் கோர்ட்டில் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில் பதிவு செய்த வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

(இந்நிலையில் இச்சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், எனது வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் விஜயகுமார் தினமும் குடித்துவிட்டு வந்த அவரது மனைவியிடம் தகராறு செய்வார் என்றும், அப்போது நாங்கள் சண்டையை விலக்கி சமாதானம் செய்து வைப்போம் என்றும், 12.05.2023ம் தேதி இரவு 10 மணிக்கு எதிரி விஜயகுமார் குடிபோதையில் அவரது மனைவி ரோஷினியிடம் தகராறு செய்து வந்தார் என்றும், அப்போது நானும் எனது சின்னமாமனார் சேட்டு என்கிற தங்கராஜ், சங்கீதா, அழகு ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டோம் என்றும், அப்போது எதிரி என் சின்னமாமனாரிடம் "நான் என் பொண்டாட்டி கிட்ட தான் சண்டை போடுறேன் நீ எதுக்குடா எங்க குடும்ப பிரச்சனையில் குறுக்க வர" என்று சொல்லி அவரை கெட்ட வார்த்தைகளால் திட்டினார் என்றும், பின்பு வீட்டிற்குள் சென்று சிறிய காய் நறுக்கும் கத்தியை எடுத்து வந்து குத்த போனார் என்றும், என் சின்னமாமனார் தங்கராஜ் அருகில் கிடந்த கட்டையை எடுத்து எதிரியின் நடுமண்டையில் அடித்து ரத்த காயம் ஏற்பட்டது என்றும், உடனே எதிரி என்ன அடிச்சுட்டியா என்று திட்டி கொண்டே என் சின்ன மாமனாரை பார்த்து "நீ உயிரோடு இருந்தால் தானே என்னை அடிப்பாய் இத்தோடு சாவுடா" என்று கத்தியால் தங்கராஜின் வலது பக்க நெஞ்சிற்கு மேல் ஒரு குத்தும் நடு நெஞ்சின் கீழ் பகுதியில் ஒரு குத்தும் குத்தியதில் தங்கராஜ் ரத்த காயத்துடன் சரிந்து கீழே விழுந்துவிட்டார் என்றும், இதை பார்த்து நாங்கள் சத்தம் போடவே விஜயகுமார் ஓடிவிட்டார் என்றும், அதன்பிறகு, நாங்கள் குத்துப்பட்ட தங்கராஜை ஜெயபால் உதவியுடன் ஆஸ்பத்திரியில் சேர்த்தும் அவர் சிறிது நேரத்தில் இறந்துவிட்டார் என்றும், தங்கராஜை குத்தி கொலை செய்த விஜயகுமார் மீது நடவடிக்கை எடுக்குமாறு ராசிபுரம் காவல் நிலைய்ததில் புகார் கொடுக்கப்பட்டது என்றும், சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என் உறவினர் என்பதால் அவரை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை: இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 49 of 2025**

**Deposition of P.W.3 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. அழகு | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of February 2026.

(Accused present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது ராசிபுரம் பழனிசந்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இறந்து போன சேட்டு என்கிற தங்கராஜ் என் தாய்மாமா. ஆஜர் எதிரி விஜயகுமார் எனது இன்னொரு தாய்மாமா சடையனின் மகன். சேட்டு என்கிற தங்கராஜ் திருமணம் ஆகாமல் தனியாக நான் குடியிருக்கும் வீட்டிலிருந்து 3வது தெருவில் குடியிருக்கிறார். எதிரி விஜயகுமார் அவரது மனைவி ரோஷினியுடன் சேட்டு என்கிற தங்கராஜ் குடியிருந்த வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்தார். 2 வருடத்திற்கு முன்பு 12ம் தேதி இரவு 10 மணிக்கு சம்பவம் நடந்தது. நான் சம்பவ சமயம் வீட்டிலிருந்தேன். என் வீட்டிற்கு வந்து ஒரு பையன் என் மாமா மகன் விஜயகுமார் வந்து சேட்டு என்கிற தங்கராஜ் மாமாவை கத்தியால் குத்திவிட்டதாக சொன்னார். ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய்விட்டதாக சொன்னார்கள். அதனால் நான் நேராக ஆஸ்பத்திரிக்கு போய்விட்டேன். சம்பவ இடத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் நேரில் பார்க்கவில்லை. ஆஸ்பத்திரியில் சேர்த்தவுடன் சிறிது நேரத்தில் சேட்டு என்கிற தங்கராஜ் இறந்துவிட்டார். அதன்பிறகு, மறுநாள் காலை 7 மணிக்கு ஸ்டேஷனில் வைத்து என்னை விசாரித்தார்கள். ஆஸ்பத்திரியில் வைத்து விசாரிக்கவில்லை. 4 முதல் 5 நாட்கள் கழித்து போலீசார் என்னை நீதிமன்றத்திற்கு கூட்டி சென்றார்கள். நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேன். கையெழுத்து போட்டு வந்தேன். அதன்பிறகு, இவ்வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில் பதிவு செய்த வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

(இந்நிலையில் இச்சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், எனது வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் விஜயகுமார் தினமும் குடித்துவிட்டு வந்த அவரது மனைவியிடம் தகராறு செய்வார் என்றும், அப்போது நாங்கள் சண்டையை விலக்கி சமாதானம் செய்து வைப்போம் என்றும், 12.05.2023ம் தேதி இரவு 10 மணிக்கு எதிரி விஜயகுமார் குடிபோதையில் அவரது மனைவி ரோஷினியிடம் தகராறு செய்து வந்தார் என்றும், அப்போது நானும், லட்சுமி, எனது தாய்மாமா சேட்டு என்கிற தங்கராஜ், சங்கீதா ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டோம் என்றும், அப்போது எதிரி தாய்மாமாவிடம் "நான் என் பொண்டாட்டி கிட்ட தான் சண்டை போடுறேன் நீ எதுக்குடா எங்க குடும்ப பிரச்சனையில் குறுக்க வர" என்று சொல்லி அவரை கெட்ட வார்த்தைகளால் திட்டினார் என்றும், பின்பு வீட்டிற்குள் சென்று சிறிய காய் நறுக்கும் கத்தியை எடுத்து வந்து குத்த போனார் என்றும், என் தாய்மாமா தங்கராஜ் அருகில் கிடந்த கட்டையை எடுத்து எதிரியின் நடுமண்டையில் அடித்து ரத்த காயம் ஏற்பட்டது என்றும், உடனே எதிரி என்ன அடிச்சுட்டியா என்று திட்டி கொண்டே என் தாய்மாமா பார்த்து "நீ உயிரோடு இருந்தால் தானே என்னை அடிப்பாய் இத்தோடு சாவுடா" என்று கத்தியால் தங்கராஜீன் வலது பக்க நெஞ்சிற்கு மேல் ஒரு குத்தும், நடு நெஞ்சின் கீழ் பகுதியில் ஒரு குத்தும், குத்தியதில் தங்கராஜ் ரத்த காயத்துடன் சரிந்து கீழே விழுந்துவிட்டார் என்றும், இதை பார்த்து நாங்கள் சத்தம் போடவே விஜயகுமார் ஓடிவிட்டார் என்றும், அதன்பிறகு, நாங்கள் குத்துப்பட்ட தங்கராஜை ஜெயபால் உதவியுடன் ஆஸ்பத்திரியில் சேர்த்தும் அவர் சிறிது நேரத்தில் இறந்துவிட்டார் என்றும், தங்கராஜை குத்தி கொலை செய்த விஜயகுமார் மீது நடவடிக்கை எடுக்குமாறு ராசிபுரம் காவல் நிலைய்ததில் புகார் கொடுக்கப்பட்டது என்றும் 13.05.2023ம் தேதி காலை 7 மணிக்கு ராசிபுரம் அரசு மருத்துவமனையின் சவக்கிடங்கு முன்பு ராசிபுரம் காவல் ஆய்வாளர் இறந்து போன சேட்டு என்கிற தங்கராஜீன் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்த போது நானும் உடன் இருந்து சாட்சி கையெழுத்து போட்டேன் என்றும், சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என் தாய் மாமா மகன் என்பதால் அவரை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை: இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 49 of 2025**

**Deposition of P.W.4 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ஜெயபால் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of February 2026.

(Accused present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது ராசிபுரம் ஆறுமுக சந்தில் குடியிருந்து பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். இறந்து போன சேட்டு என்கிற தங்கராஜ் எனக்கு மாமா முறை. ஆஜர் எதிரி விஜயகுமார் இறந்தவரின் அண்ணன் மகன். சேட்டு என்கிற தங்கராஜ் திருமணம் ஆகாமல் தனியாக குடியிருந்து வந்தார். அவரது வீட்டிற்கு பக்கத்தில் எதிரி விஜயகுமார் அவரது மனைவி ரோஷினியுடன் குடியிருந்து வந்தார். 3 வருடத்திற்கு முன்பு இரவு 10 மணிக்கு மேல் சேட்டு குடியிருந்த வீட்டிற்கு முன்புறம் சம்பவம் நடந்தது. நான் அப்போது அங்கிருந்து 200 அடி தள்ளியுள்ள என் வீட்டில் இருந்தேன். சேட்டு என்கிற தங்கராஜ் மயங்கி கீழே விழுந்து கிடக்கிறார் அவரை ஆஸ்பத்திரிக்கு கூட்டிபோக வேண்டும் என்று சொல்லி சங்கீதா என்னை அழைத்தார். நான் போய் பார்த்தபோது, அவர் வீட்டிற்கு எதிரே உள்ள ரோட்டில் தங்கராஜ் விழுந்து கிடந்தார். உடலில் இரத்தம் இருந்தது. எங்கு காயம் ஏற்பட்டது என்று பார்க்கவில்லை. அவரை எனது பைக்கில் வைத்து ராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு கூட்டி போய் சிகிச்சைக்கு சேர்த்தேன். சிறிது நேரத்தில் அவர் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக யார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்று தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். கையெழுத்து வாங்கி கொண்டார்கள்.

(இந்நிலையில் இச்சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், எனது வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் விஜயகுமார் தினமும் குடித்துவிட்டு வந்த அவரது மனைவியிடம் தகராறு செய்வார் என்றும், அப்போது நாங்கள் சண்டையை விலக்கி சமாதானம் செய்து வைப்போம் என்றும், 12.05.2023ம் தேதி இரவு 10 மணிக்கு எதிரி விஜயகுமார் குடிபோதையில் அவரது மனைவி ரோஷினியிடம் தகராறு செய்து வந்தார் என்றும், அப்போது லட்சுமி, சேட்டு என்கிற தங்கராஜ், சங்கீதா, அழகு ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டார்கள் என்றும், அப்போது எதிரி சேட்டு என்ற தங்கராஜிடம் "நான் என் பொண்டாட்டி கிட்ட தான் சண்டை போடுறேன் நீ எதுக்குடா எங்க குடும்ப பிரச்சனையில் குறுக்க வர" என்று சொல்லி அவரை கெட்ட வார்த்தைகளால் திட்டினார் என்றும், பின்பு வீட்டிற்குள் சென்று சிறிய காய் நறுக்கும் கத்தியை எடுத்து வந்து குத்த போனார் என்றும், தங்கராஜ் அருகில் கிடந்த கட்டையை எடுத்து எதிரியின் நடுமண்டையில் அடித்து ரத்த காயம் ஏற்பட்டது என்றும், உடனே எதிரி என்ன அடிச்சுட்டியா என்று திட்டி கொண்டே பார்த்து "நீ உயிரோடு இருந்தால் தானே என்னை அடிப்பாய் இத்தோடு சாவுடா" என்று கத்தியால் தங்கராஜீன் வலது பக்க நெஞ்சிற்கு மேல் ஒரு குத்தும் நடு நெஞ்சின் கீழ் பகுதியில் ஒரு குத்தும் குத்தியதில் தங்கராஜ் ரத்த காயத்துடன் சரிந்து கீழே விழுந்துவிட்டார் என்றும், இதை பார்த்து நாங்கள் சத்தம் போடவே விஜயகுமார் ஓடி விட்டார் என்றும், அதன்பிறகு, நான் குத்துப்பட்ட தங்கராஜை போக்குவண்டியில் ராசிபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன் என்றும், அவர் சிறிது நேரத்தில் இறந்துவிட்டார் என்றும், சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என் மாமா மகன் என்பதால் அவரை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை: இல்லை.